1096

அண்ணாமலையார் துணை.

திருச்சினாப்பள்ளி வீராசாமி பிள்ளை குமாரர்

டிராமா அயன் ராஜபார்ட்

# டி. வி. ஆர். சின்னசாமி பிள்ளை

அவர்கள் இயற்றிய

இந்தியா

# இராஜேந்திர திலகம்.

முதற்பாகம்.

OFFICE OF THE REGISTRAR ... 10 JUN 1925 ... MADRAS



...ரசைவாக்கம் மோடார் மெக்கானிக்
...பிள்ளை அவாகள் வேண்டுகோளின்படி
அச்சிடப்பட்டது. விலை 6 அணா

...llore. Copy Right.

O-,1X
N25
180424

10

10 JUN 1925
MADRAS

அண்ணாமலையார் துணை.

திருச்சினாபள்ளி வீராசாமி பிள்ளை குமாரர்

டிராமா அயன் ராஜபார்ட்

## டி. வி. ஆர். சின்னசாமி பிள்ளை

அவர்களால் இயற்றிய

இந்தியா

# இராஜேந்திர திலகம்.

இப்புஸ்தகம் புராணம் தத்துவம் வேதாந்தகவி உபமரன
வசனகாவியங்களுடனும் தற்கால நாகரீக டிராமா
இராகதாள வர்ணமெட்டுகளுடனும்
அமைத்துள்ளது.

---

வேலூர்: சுந்தர விநாயகர் அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

---

1925.

180426
சென்னை-600 008.

அண்ணாமலையார் துணை

அகரமுதலெழுத்தெல்லாமாதி
பகவன் முதற்றேயுலகு

என்னும் சகல காரணங்களுக்கும் கடவுள் ஒருவன் மண்ணுலக உயிரனைத்தும் தன்னுயிரென விளங்கும் புண்ணிய பூமான்களும் கண்ணிய சீமான்களும் அவீரிர்கள்.

(அரசினைப் பகைத்திட்டாரும் ஆருயிரிழப்பர்தாமே)

ஔவை.

வேந்தன் சீரில் ஆந்துணை இல்லை
சக்கர நெறிநில்.

என்றதை உணராமல் நமது மன்னன் குடிபடைகளிடம் அதிகமான வரிவாங்குகின்றாரென்றும் நீதிமுறை வரம்பு கடந்து நடக்கிறாரென்றும் மனம்போன போக்குக்கொரு பாதையில்லையென்று பேப்பர்களிலும் சில வித்வ சிரோன்மணிகள் பாடல்களிலும் வரைந்து இருக்கின்றார்கள்

பாருங்கள் நமதுநன்மைக்காகஎத்தனைவித (சட்டம்நூல்களுடன்) கோர்ட்டுகள் யேர்ப்பாடு செய்து யெவ்வளவு ஒவ்வொரு கோர்ட்டுகளுக்கும் ஆட்கள் வேண்டியதாய் இருக்கும் இன்னும் தபாலாபீசு யென்ன முனிசிபலாபீசுகளும்

சட்டத்துடன் யேர்ப்படாதவிஷயத்தில்நமதுஇந்துக்களுக்கு சகல சௌகிரியமும் யேற்ப்படுமா ஒருவர்க்கொருவர் நயம் பயம் உண்டாகுமா ஒருக்காலும் உண்டாகாது.

வெள்ளையர்களிடத்தில் ஒருவர் வேலைக்கு இருந்தால் பின்னிட்டு மனதில் கலக்கமில்லாமல் பென்ஷன் சம்பளம் ஆயுள்வரையிலும் கொடுக்கின்றார்கள் அதைப்போல் நமது இந்துக்கள் மனதில் கிலேசம் இல்லாமல் கொடுப்பார்களா ஒருக்காலுங் கொடுக்கார்கள்.

நிற்க அவர்கள் தர்ம ஆஸ்பத்திரியும் தர்ம ஸ்கூலும் இன்னும் இந்தியாவில் அநேகமான தர்மங்கள் செய்து வைத்து இருக்கிறார்கள். அதுகளெல்லாம் ஒருக்காலும்மாராத தர்மமாக இருக்கும், நமது இந்துக்கள் ஓர் கோவில் குளம் சத்திரம் சாவடிகளுக்கு சில பொருளை தானம்செய்து இருந் தால் அவர்கள் தன் நிலமை கைப்பொருள் மாரிவிட்டால் மருபடி அந்த கோவிலுக்கும் இன்னும் ஷை சொத்துக்கும் நான்தான் தர்மகர்த்தா யென்று யேர்ப்படுகிறார்களே அந்த வெள்ளையர்கள் அப்படி ஒருக்காலும் யேர்படமாட்டார்கள்.

நிற்க.

## குறள்

உழுதுண்டு வாழ்பவரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின் செல்வார்

என்ற வாக்கியத்தை உணராமல் பரித்தியஞ்சே பெரிதாகவும் அதனால் வெள்ளையர்கள் மேன்மை அடைகிறார்களென்றும் தங்கள் கருத்தில் யேர்ப்பட்டு தேசமெங்கும் அநேக கலகமும் பூமியில் மழைமாரி யில்லாமலும் ஒருவர்க்கொருவர் நீண்டகாலத்தின் நிலமையை கைவிட்டு நிர்க்கின்றார்கள்.

தவிர தற்காலத்தில் வெள்ளையர்கள் சில பொருள்களும் சாமான்களும் இல்லாவிட்டால் இக்காலத்தில் நாகரீகமென்பது யேர்ப்படுமா?

பாருங்கள் இந்த இந்துக்கள் ஜாதிவேற்றுமையென்றும் சுய ஆட்சி வேண்டுமென்கிறார்களே அவர்கள் மனதைதாம் அரியும்பொருட்டு ஒட்டு கொடுக்கிறார்கள். அதின் விஷயமாய் யெவ்வளவு பொறாமை யேர்ப்படுகிறது பார்த்தீர்களா இன்னம் சுய ஆட்சி கொடுத்தால் உலகம் நிலைநிற்குமா பயம் நயமுண்டாகுமா நன்றாய் யோசிக்கவும்

நண்பர்களே மஹாத்மா காந்தியின் பிறசங்கத்தை கேட்க்கும் காலத்தில் சில பிரபுக்கள் அது சமயம் மாத்திரம்

## பட்டினத்தடிகள்

வேதத்தினுட் பொருள் மண்ணாசைமங்கையை விட்டுவிடு
போதித்தவன் மொழிகேட்டிலையே செய்த புண்ணியத்தா
லாதித்தன் சந்திரன்போலே வெளிச்சம் தாம்பொழுது
காதற்றவூசியும் வாராதுகாண் கடைவழிக்கே

என்ற வாக்கியத்தை யுணர்ந்தவுடன்

## வெண்பா

உடல்பொய்புறவாகி உண்மையுறவாக
கடவாரூர் தன்னருளே காண்பாய் திடமுடனே
உற்றுப்பார் மோனவொருசொல்லே உன்மை
[நன்றாய்
பத்திப்பார் மற்றதெல்லாம்பாழ்.

என மனதில் நினைத்து அந்த நவகோடி சொத்தையும் கணப்பொழுதிலே விட்டுவிட்டு எப்படி துறவியானாரோ அதைப்போல் மஹாத்மா வாக்கியத்தை கேட்டவுடன் இனி அயல் நாட்டு உடையே கூடாது. கதராடை அணிந்துகொள்வோமென அணிந்து கொள்கின்றார்களே அந்தக்கதராடையை தைப்பதற்கு எந்த ஊசியோ, எந்த நூலோ, தைக்கும் மிஷன் யாருடையதோ, துணியை கத்தரிக்கும் கத்தரிக்கோல் யெதுவோ, சிறசுக்கு கதிரோளி காணாமல் கையில் பிடிக்கும் குடை யெதுவோ, கொலைசெய்யபடா துஎன்கிறார்களே பாதத்தில் அணியும் சில்பர்பூட்சு செருப்பு களெல்லாம் யெதுவோ யோசித்துபாருங்கள் இக்காங்கிரசில் உடன்பட்டவர்கள் அயல் நாட்டு வார்த்தையே உபயோக்ககூடாது நமது தாய் நாட்டின் பாஷையே உபயோகிக்க வேண்டுமென

## குணங்குடியார்

மெத்தபடித்த வெரும்பா சபித்தருக்கு
சித்தம் தெளியாதேன் செய்கை நிராபரமே

என்பதுபோல் அவர்களே முக்கியமாக அயல் நாட்டு பாஷையே உபயோகப் படுத்துகிறார்கள் கடவுள் மற்றவர்களுக்கு போதிக்க புத்தியை கொடுத்தவர் தனக்கு யேன் கொடுக்கவில்லை

## ஔவை

பெண்டீர்க்கழகெதிர் பேசாதிருத்தல்
கற்பெனப்படுவது சொற்றிறபாமை

## நாயனார்

அடிசிற்கினியாளே அன்புடையாளே
படிசொற்றவராதபாவாய் அடிவருடி
பின்றூங்கி முன்னெழுந்த பேதையே போதியோ
என்றூங்குமென் கண்ணிரு) இன்னும்

இயற்கை நாயரின் மனைவி தன் கணவன் பிரியப்படி மாறுவேடம் கொண்டுவந்த பரமசிவன்பின் சென்றதால் கணவன்மனைவி இருவர்களும் பரமன்றுள் பெற்றார்களன்றோ

கபிலதாசரின்மனைவி தன்கணவன் கட்டளைப்படி அடியார்களுக்கு அன்னமிட பண்டங்கழித்த வர்த்தகனிடம் சென்றார்களன்றோ கல்யாணி தன் கணவன் இஷ்டப்படி தாசியின் வீட்டு முற்றத்தை கூட்டி கோலம் இட செய்ததும் பொழுது விடியாமல் இருக்க சக்தி பெற்றார்களென்றும் அறிந்த விஷயம்தானே இத்யாதி குணங்கள் வாய்ந்தவர்கள் பதிவிரதையென முன்னோர்கள் வாக்கியம் நிற்க தாம் எப்பொழுது மஹாத்மாகாந்தியின் விரதபூஷணனாய் பேர்பட்டோமோ அப்பொழுது தன்மனைவியும்

## குசேலர்வாக்கியம்

அன்பர் துஞ்சிடில் துஞ்சுதல் ஆங்கவர்
துன்பம் வெய்திடில் தாமும் அத்துன்புறல்
இன்பமுற்றிடில் இன்புற்றிருத்தலே
மன்பெருந்தவம் கற்புடைமாதர்க்கே

என்பதுபோல் தன்னுடைய மனைவிக்கும் இக்குணங்களை புகட்டி தன்னைப்போல் கதருடை அணிய செய்யாமல் சில பேர்கள் இமிடேஷன் சிலுக்கும் மல்லும் இன்னம் இங்கிலீஷ் சாமான்களை அணியச்செய்து நாகரீகமாக இருக்கின்றார்கள் பாருங்கள். தன் மனைவிக்கு உபதேசம் செய்து சீர்திருத்தம் செய்யாததார்

"கற்றதுகை மண்ணளவு கல்லாதது கையளவு"

எனயோசிக்காமல் பிறருக்கு போதிப்பதேன்

அருந்தவ முயர்ச்சியுமடிகற் பேணலும்
விருந்தெதிர் கொள்கையும் மேன்மை கூறலும்
வருந்தினர்யாவரும் மெத்த வாழ்தலும்
திருந்தியவிச்செயல் சித்தமாகுமே

மனமான செய்நினைக்கும் புத்தி விசாரிக்கும் அகங்காரம் கொண்டெழுப்பும் சி த த மே மா அரிவிக்கும். இந்த நான்குகறணங்களோடகோமாதிராக துவேஷங்களை சீர்திருத்தி

## (பரமானந்தீதபம்)

இச்சைக்கு வித்தான மனதைபற்றி
இழுத்துவந்து மூலமதில் நிருத்திக்கொண்டு
யெச்சரிக்கையாக நித்தம்பற்றி பார்த்தால்
யெண்ணிருந்த கன்ம மெல்லாம் வெண்ணீறுகும்

என்றது முன்னோர் வாக்கியம் இன்னும்.

தீண்டா தொழித்து ஒற்றுமையாக வேண்டுமென்கிறார்களே அவர்கள் எப்படிப்பட்ட குணமுடையவர் ஒற்றுமையாவார்களென்றால்

## பரமானந்த தீபம்

இச்சையற்ரோர்க்கின்பமில்லை துன்பமில்லை
இருவினையோடிறவுமில்லை பகலுமில்லை
குச்சிதனைக்கிறைதேடி திரிவதில்லை
குலமே இல்லை நலமே இல்லை
சச்சயமாய் வாதமில்லை பேதமில்லை
சங்கற்ப விகற்பமில்லை தானே தானாய்
அச்சமற சுகித்திருப்பார் சிசுவைப்போலே
ஆனந்தவிளையாட்டோ டிருப்பர் தாமே

(வள்ளாளர்)

காண்பதுங் கேட்பதுங் கருதும் சொப்பனம்
பூண்பதும் புணைவதும் புசிப்பதும் சொப்பனம்
சேண்படுநாகமும் செகமும் சொப்பனம்
வீண்படுமிவையெல்லாம் விசுத்தனன்றே

## பட்டனத்தடிகள்

ஊருஞ்சதமல்ல உற்ரூர்சதமல்ல உற்றுபெற்ற
பேருஞ்சதமல்ல பெண்டீர்சதமல்ல பிள்ளைகளுஞ்
சீருஞ்சதமல்ல செல்வம்சதமல்ல இத்தேசத்திலே
யாருஞ்சதமல்ல நின்ருள்சதங் கச்சியேகம்பனே

மனையாளும் மக்களும் வாழ்வுந்தன முந்தன்வாயில்மட்டே
யினமான சுற்றமயானமட்டே வழிக்கேது துணை
தினையாமள வெள்ளளவாகினும் முன்புசெய்த தவம்
தனையாள வென்றும்பரலோகம் சித்திக்கும் சத்தியமே

அத்தமும் வாழ்வும கத்துமட்டே விழியம் பொழுக
மெத்தியமாதரும் வீதிமட்டே மெய்விம்மி விம்மி யிரு
கைத்தலைமேல் வைத்தழுகும் மைந்தரும் சுடுகாடுமட்டே
பற்றிதுடரும் இருவினை பாவ புண்ணியமே

காடோ செடியோ கடற்புறமோ கனமேமிகுந்த
நாடோ நகரோ நகர்நடுவோ நலமே மிகுந்த
வீடோ புறத்திண்ணையோ தமியேனுடல் வீழுமிட
நீடோ கழுக்குன்றி லீசாவுயிர்த்துணை நின்பதமே

## திருமங்கையாழ்வார்

மின்னுருவாய் முன்னுருவில் வேதநான்காய்
விளக்கொளியாய் முளைத்தெழுந்த திங்கள்தானாய்
பின்னுருவாய் முன்னுருவிற் பிணிமூப்பில்லா
பிறப்பிலியா யிறப்பதற்கே யெண்ணாதெண்ணும்
பொன்னுருவாய் மணியுருவிற் பூதமைந்தாய்ப்
புனலுருவா யனலுருவிற் றிகழுஞ்சோதி
தன்னுவருர் யென்னுருவில் நின்றவெந்தை
தளிர்புரையும் திருவடி யென்றலைமேற்கொண்டேன்

## திருவருட்பா

பொன்னுகி மணியாகி போகமாகிப்
புறமாகியகமாகி புனிதமாகி
மன்னுகி மலையாகி கடலுமாகி
மதியாகி ரவியாகி மற்றுமாகி
முன்னுகிப் பின்னுகி நடுவுமாகி
முழுதாகி நாதமுற முழங்கியெங்கு
மின்னுகி பரவியின்ப வெள்ளந்தேக்க
வியன்கருணை பொழிமுகிலாய் விளங்கும் தேவே

## சிவானந்தமாலை

எங்கும் சிவமே யொழியவில்லை யவன்றன்னை
அங்கம் திறல்கருவி ஆணவமாம் பொங்குமிருன்
மைத்தெய்த மாமாயை மாயைவினைமற்றனைத்தும்
பொய் பொய் பொய் பொய் பொய் பொய் பொய்

## தாயுமானவர்

நித்தியமாய்நின்மலமாய்நிட்கலமாய்நிருமயமாய்நிறைவாய்
[நீங்கா

சத்தமுமாய் தூரமுமாய்ச் சமீபமுமாய் துரியநிறைசுடர
[யெல்லா

வைத்திருந்த தாரகமாயானந்தமயமாகிமனவாக்கெட்டாச்
சித்துருவாய் நின்றவொன்றை சுகாரம்ப பெருவெளியை
[சிந்தைசெய்வாம்

## தாயுமானவர்

அவனன்றியோரணுவு மசையாதெனும் பெரிய
வாய்தர் மொழியொன்று கண்டாய்
வரியாவதேதுசில வறியாமதேது இவை
அரிந்தவர்களறிரிந்தார்களார்
மௌனமேரடிருந்தாரேன் போலுடம் பெல்ாம்
வாயாய் பிதற்றுபவரார்
மனதென்று வொருமாயையெங்கே இருந்துவரும்
வன்மையோடிறக்கமெங்கே
புவனம்படைப்பதென் கர்த்தவிய மெவ்விடம்
பூதபேதங்களெவ்விடம்
பொய்மெயித மகிதமேல் வருநன்மையொடு
பொறை போருமையெவ்விடம்
மெவர் சிரியரெவர் பெரியரெவருறவ ரெவர்பகைஞர்
யாதுமுனே யன்றியுண்டோ
இகபரமிரண்டினு முயிரினுக்குயிராகி
எங்கும் நிறைகின்ற பொருளே.

## குணங்குடியார்

மட்டி களினுங்கெட்ட சுட்டிவால் வெட்டிபேய்
மட்டிசெட்டித்தபாவி
வஞ்சநமனுக்கு வாரிக்கொடுத்திட வுடலை
வளமாய் வளத்த பாவி
சட்டிவைத்துச் சட்டிவாங்கும் பெருந்தொப்பை
சற்றுமரியாத பாபி
சண்டாளருக்குமா சண்டாளருக்குமா
சண்டாளனனபாவி
பொட்டயிபிலீசுவைக்குட் பட்டபாவியொரு
போக்குநீக்கற்ற பாவி
போகாதபாவி யடியேநுமை நம்பினேன்
பொய்மைதந்தாளுதற்கு
வட்மதி வெட்டகமுகமுள்ள நீர் பின்ருெடற
வள்ளவிர சூல்வருகவே
வளருமொரு நிறைகுணம் குடிவாழுமென்னிருகண்
மணியே முகியதீனே.

## திருப்புகழ்

தத்த தத்த தாத்த தத்த தத்த தாத்த
தத்த தத்த தாத்த தன தாண

மஞ்சுமெச்சும் சூத்தரம் ரத்தபித்த மூத்தரம்
வைச்சிறைச்சபாத்தரம் அனுபோகம்

மட்க்கவிட்ட செக்கை உப்புழுத்தவாக்கை
மட்குலபதார்த்தம் இடிபாண்ற

எச்சிலேச்சபேய்க்கு மெச்சிலேச்ச நாய்க்கு
மெச்சிலேச்ச ஈக்கு மிறையாகும்

இக்கடத்தை நீக்கி அக்கடத்துள்ளாக்கி
இப்படிக்கு மோக்ஷ மருள்வாயே

இக்குணதிபர்களாய் ஒவ்வொருவர்களும்இருக்கும்விஷயத்தில் தீண்டாதொழிய காரணமுடிவுபெறும். பாருங்கள் இக்குணமோடு சகலரும் இருப்பார்களா ஒருக்காலும் இருக்கமாட்டார்கள் ஆனதால் ஒற்றுமையென்பது கண்டிப்பாய் யேற்படாது.

### த்ரயுமானவர்

காகமுறவு கலந்துண்ண கண்டீர கண்டா காரசிவ
போகபேரின்பவெள்ளம் பொங்கிததும்பி பூரணமாய்
யேகவுருவாகக்கிடக்குதையோ வின்புற்றிடாமெடுத்த
தேகம்விழுமுன் புசிப்பதற்கு சேறவாரும் ஜெகத்தீரே.

## குணங்குடியார்.

சாகாமற் செத்திருக்குஞ் சற்குருவின் குணங்குடியை
சார்ந்தோமாகில்
சாகாமற் செத்திருக்குஞ் சாயுச்ய பதந்தஞ்சாட்
சாதியாக்குஞ்
சாகாமற் செத்திருக்குந் தன்மையத்தோர்க்குற்றபெருந்
தகையுங்காட்டுஞ்
சாகாமற் செத்திருக்கு முத்தியுஞ் சித்திடுங்காண்
தனக்குதானே.

சகலமுமுணர்ந்த தாயுமானவரும் குணங்குடியாரும் அக்காலத்தில் நல்ல ஞானங்களைபுகட்டி வாருங்கள் என்று அழைத்து இருக்க அதர்க்குடன்படாவர்கள் இக்காலத்தின் போதனையைக் கேட்டு ஒற்றுமையாகப்போகிறது கிடையாது. அது ஏனென்றால்

## சதகம்.

தாய்புத்திசொன்னால் மருந்திடுங்காலம்
தந்தையை சீறுங்காலம்
சற்குருவை நிந்தைசெய்கால மெய்சடவுளை
சற்றுமெண்ணாத காலம்

பேய்தெய்வமென்று பசரித்திடுங்காலம்
புறட்டருக்கேற்ற காலம்
பெண்டாட்டிவையினும் கேட்கின்ற காலநற்
பெரியோர்சொற் கேளாத காலம்
தேய்வுடன் பெரியவர் சிறுமையுரு காலமிகு
சிறியவர் பெருகுங் காலம்
தெருவிட்டோடினோர் வரிசை பெருங் காலம்வ்வசை
செப்புமோர்க்குதவு காலம்
வாய்மதம் பேசிடுமணியாய் காரர்க்கு
வாய்ந்த நற்க் காலமையா
மயிலேறி விளையாடும் குகனேபுல் வயநீடு
மலைமேவுங் குமரேசனே.

## (தாயுமானவர்)

ஆசையெனும் பெருங்காற்றிலவம்பஞ்
செனவுமன தலையுங்காலம்
மோசம்வருமிதனாலே கற்றதுங் கேட்டு
துந்தூர்ந்து முத்திகான
நேசமுறு நல்வாசமும் பொய்புலனையிற்
கொடுமை பற்றிடும் பறந்தோ
தேசுபழுத்தருள் பழுத்த பாராபரமே
நிராசையின் றேற்றெய்வமுண்டோ.

# கரூர் பூஜாபதி.

புகழுவார் வேதமெல்லாம் வந்ததென்று
பொய்பேசி சாஸ்திரங்கள் மிகவுங்கற்று
அகலுவார் பெண்ணாசைவிட்டோ மென்று
அருள் கெட்டு ஊர்தோரும் சுற்றி சுற்றி
சகலமுமே வந்தவர்போல் வேடம்பூண்டு
சடைமுடியுங் காயசதம் தன்னை சாற்றி
இகழுமனமடங்காமல் நினைவுவேராய்
எண்ண மெல்லாம் பெண்ணாசை பூசைதானே

## (ஞானவெட்டி)

"மண்டலத்தில் குருக்களென்று பெயரும் பெற்று
மகத்தான தூளிதமுமணிந்து கொண்டு
குண்டலங்கள் செவியிலிட்டு குல்லாசாற்றி
கோகர்ணம் கெஜகர்ணம் இரண்டும் கற்று
தென்றிசையில் பலவாராய் பொய்கள்பேசி
சீடனுக்கு உபதேசம் தெளிய சொல்லார்
ஒன்றுமில்லை அவர்கள்கையில்வித்தையாச்சு
உள்ளவர்த்தமானமதைஉரை செய்தவாரே."

## கைவல்ய நவநீதம்

"தேகமல்லாமல் வேரேதேகியர் காணேனென்பார்
மோகமாம் கனவில்வந்து முளைத்திடுமவனர் சொல்வார்
சோகமாம் கனவுதோன்று சுழித்தி கண்டவனர்சொல்
ஆகநீ நனவிலென்னு அறிவுதானேது சொல்வார்." [வார்

## விருத்தம்.

ஒருகோட்டுகலைமுனியும் புலிதிகழும் நல்லாடை உடுத்த [கோவும்
மருமலர் வாழ்த்திசைமுகனும் வானவரும்மகிடன்றனும்
கரியநிரம் திருமாலும் பராசனுமே காமநன்பால்
பெருமையிழந்த தென்றலிச்சிருமனிதர்க்கெப்படியோ [பேசுங்காலே

## மணிமுத்துமாலை.

"மானிலத்தில் மாசாய மென்னுமாலி மென்னும்
மகிமையுள்ள துயில்கலையுமணிந்துகொண்டு
கோனிடையன் கோல்பிடித்துங் காடுமேய்க்கும்
கோலமென குருவானேட தீதுமொழி
போனிடத்தில் பொல்லாங்கையுண்டு பண்ணிப்
புல்லருக்கு பொய்யான முரீது செய்வார்

ஞானமில்லை யவர்கள் கைவிட்டே யல்லால்
யாவருமேயரிய உடற்கூறதாமே.

என்பதோடு

(இன்னம் ஒன்று,)

## தாயுமானவர்.

கந்துகமதக்கரிய வசமாய் நடத்தலாம்
காடி வெம்புலி வாயையும்
கட்டலா மொருசிங்க முதுகுமேற் கொள்ளலாம்
கட்செவியை யெடுத்தாட்டலாம்
வெந்தழலினிவிருதம் வைத்தைந்து லோகத்தையும்
வேதித்து விற்றுண்ணலாம்.
வேறொருவர்காணாமலுலகத்துலாவலாம்
விண்ணவறையேவல் கொள்ளலாம்
சந்ததமு மிளமையோடிருக்கலாம் மற்றொரு
சரீரத்தினும் புகுதலாம்
சலமேல் நடக்கலாம் கனல்மீதிருக்கலாம்
தன்னகறை சித்திபெறலாம்
சிந்தையை யடக்கியே சுமமாவிருக்கின்ற
திறமறிதுசற்றுகி யென்

சித்தமிசை குடிகொண்ட வரிவான தெய்வமே
மேதேசோமயானந்தமே.

தாயுமானவரே உலகத்தில் எக்காறணத்தை செய்தாலும் செய்யலாம் தன் சிந்தையை அடக்குவது மிக்க கடின் மென்றுரைத்திருக்க இந்தகாலத்திலுள்ளவர்களால் சிந்தையை ஓர்வழியில் சீர்பெற்று ஒற்றுமை ஆகுமா ஒருக்காலும் ஆகாது

(இன்னம் ஒன்று ஆதாரவது.)

## குறல்.

"குணனும் குடிமையும் குற்றமும் குன்றா
வினனுமந்தியார்க்கு நட்பு."

அவரவர்கள் குணங்களை அறிந்து நன்குபுகட்டவும் என்றதுடன்.

"சிந்தையறியாதார்க்கு போதிப்பதல்லவே
செப்பினும் வெகு தர்க்கமாம்"

என்பதுபோல் சகலருக்கும் போதிப்பதில் என்னகுணம் சிந்தையறிந்தல்லவா போதிக்கவேண்டும்.

அது எப்படி என்றால்

## (அருணாஜலப்புராணம்)

கல்லாலின் புடையமர்ந்து நான்மறையா மாங்கமுதற்கற்ற [கேள்வி
வல்லார்கள் நால்வருக்கும் வாக்கிறந்தபூறணமாய் மறைக்கப் [பாலாய்
யல்லாமாய்யல்லதுமாஇருந்ததனை யிருந்தபடி யிருந்துகாட்டி
சொல்லாமற் சொன்னவறை நினையாமல் நினைந்து பவத்தொ [டக்கையெல்லாம்.

கடவுள் எத்தன்மையாய் இருந்து மௌன நிலமையை புகட்டினூறோ அதைப்போல் தங்கள் உண்மையைப்புகட்டி

## தாயுமானவர்.

"சொல்லானதிர் சற்று வாராத பிள்ளையை
தொட்டிலில்வைத்து ஆட்டி ஆட்டி
தொடையினை கிள்ளர்போற் சங்கற்ப மொன்றிற்
றெடுக்கும் தொடுத்து நிற்கும்
பொல்லாதவாதனையெனும் சப்தபூமியிடை
போந்துதலை சுற்றியாடும்
புருஷனிலடங்காத பூவைபோற்றூனே
புறம்போந்து சஞ்சரிக்கும்

"கல்லோடிரும்புக்கு மிகவண்மை காட்டிடும்
காணாது கேட்டவல்லாம்
கண்டதாகக்காட்டி யணுவாய் சுருக்கிடுங்
கபடநாடக ஜாலமோ
எல்லாமும் வலதிந்தமனமாயை யேழையா
மென்னாலடக்கவசமோ
விகபரமிறண்டினு முயிரினுக்குயிராகி
எங்கும் நிறைகின்ற பொருளே"

ஒரு சொல்லால் வுறைக்கக்கூடிய உண்மை வரர்த்தையைக்கேட்டு ஒற்றுமையாகாதவர்கள் பலத்காரம் செய்தால் அது பொல்லாதவாதனே ஆகுமென்று முன்னோர்கள் வாக்கியம்.

தவிற முன்காலத்திலுள்ள அடியார்க்களிலொருவராகிய

## அப்பர்.

மாசிமனத்துய்யரொழிமரு நீங்கியார் நிறம்பி
தேசநெரிநிலையாமை கண்டறங்கள் செய்வாராய்
காசினிமேற் புகழ்விதாங்க நிதியழித்து கருணையினால்
ஆசிலறவச்சாலைகளும் தண்ணீர் பந்தறுமமைப்பார்.

காவலர்த்துங்குளந்தோன்றி கடப்பாடு வழுவாமல்
மேவினர்க்கு வேண்டுவன மகிழ்ந்தழித்தும் விருந்தழி
[த்தும்

நாவலர்க்கு வளம்பெருக நல்கியுகா நானித்துள்ளோர்
யாவருக்கும் தவிராத வீகை வினைத்துறை நின்றார்.,,

இந்தபடி கோவில் குளங்கள் கட்டியாகிலும் நல்ல ஈதி களைபுகட்டியாகிலும் கடவுளை தியானம் செய்து மழை மாரி பெய்து தேசம் செழிப்புற செய்யாமல் காங்கிரஸ் கக்ஷியென்னும் கலகங்களை உண்டுபண்ணிககொண்ட நாள் முதல் இது வரை தேசமும் ஜனங்களுக்கும் சுகமுற்றிருக்கின்றதா.

உண்மையில் பகலிறவுக்கும் நடுவானவன் யாரு பாவ புண்ணியங்களுக்கு பொதுவானவன் யாரு உடலுக்கும் உயிருக்கும் உரியவனாரு. கடலானவனாரு காற்றானவன் யாரு மேகமானவன் யாரு. லோகமானவன் யாரு. மலையானவன் யாரு. சிலையானவன் யாரு.

அருகம்புல் நுணியில் தங்கிய பனித்துளிவாகிய சுக்கில சுரோணிதம் கருப்ப பைநிடமிருந்து உற்பத்தியாகிய மனிதர்கள் முகம் ஒன்றுபோல் ஒன்று இருக்காமலும்குணமும் ஓசையும் வெவ்வேறாகவும் இருக்கின்றதே ஏன் ஒன்றைப்போல் ஒன்று இருக்கலாகாது. அந்தப்படிவெவ்வேறாக உண்டாக்கக்கூடியவனாரு.

இன்னம் பாருங்கள் கல் எத்தனை வகைப்படுகின்றது. புல் எத்தனை வகைப்படுகின்றது மண்ணெத்தனை வகைப்படுகிறது. சொல் யெத்தனை வகைப்படுகின்றதுபறவை எத்தனை

வகைப்படுகின்றது ஊர்வனமெத்தனை வகைபடுகின்றது நீர் வளம் எத்தனை வகைபடுகின்றது. மரங்களெத்தனை வகைப் படுகின்றது. நிறங்களெத்தனை வகைப்படுகின்றது மிரு கங்கள் எத்தனை வகைப்படுகின்றது. பக்ஷிகள் எத்தனை வகைப்படுகின்றது. இதுகளெல்லாம் ஜாதிபேதமும் ஒவ் வொன்றுக்கு காரணகர்த்தனாய் யேர்ப்பட்டு வகுத்திருப் பதை விட்டு இக்காலத்தில் ஒற்றுமை செய்யவேணுமென் கிறார்களே நன்றாய்யோசித்துப்பாருங்கள் அவனன்றி அணு வுமசையுமா. இத்துடன்

இன்னொன்று அதாவது மஹாத்மாகாந்தி விரதபூஷண ராய் இருந்தாரே அவர்

## அகஸ்தியர்

"மனமது செம்மையானல் மந்திரம் செபிக்கவேண்டாம்
மனமது செம்மையானல் வாயுவை யுயர்த்தவேண்டாம்
மனமது செம்மையானல் வாயுவை நிருத்தவேண்டாம்
மனமது செம்மையானல் மந்திரம் செம்மையாமே."

மனது உண்மையாய் இருக்கும் விஷயத்தில் விரதமும் யோகமும் எதற்கென படுகின்றது.

(29-1-1925) வியாழக்கிழமை ஆரணி 'சுகோதயன்' பேபரில் 6-வது பக்கத்தில் இந்தியா (22-1-1925) காங்கிரஸ் பத்திரிகையில் பெல்காமில் கூடிய தீண்டாதார் மகாநாட்டின் மகாத்மாகாந்தியின் கருத்து இந்த ஜென்மத்தில் என்னுடைய அபிப்பிராயப்படி நான் மோக்ஷமடையாவிட்டால் நான் இந்த அபிப்பிராயத்தைக்கொண்டே எனக்கு அடுத்தபிரவி இருந்தால் பறையர்களுக்கு இடையே நான் ஒரு பறையனாக பிறக்க விரும்புகிறேன். அப்போது இன்னம் அவர்களுக்கு திறமைவாய்ந்த உதவிபுரிகுவேனென்று தெரிவித்து இருக்கின்றார்.

இந்த ஜென்மத்தில் சுயாக்ஷி திரமாகாதென்பதோடு தவிற தீண்டாதார் குலத்தில் பிறந்து உதவிபுரிவேனென்பதை யோசிக்குமளவில் அத்தீண்டாதார்களுக்கே இவர்ஜெனித்து இக்காறணங்களை முயர்ச்சி செய்ததாகவும் காண்கிறது.

அவர் நான் மருஜென்மம்?

பிறந்து அவர்களுக்கு திறமைவாய்ந்த உதவிபுரிகுவேனென்று தெரிவிக்கலாகாதா.

மகாத்மாவென்றால் சகலருக்கும் களங்கமற்ற மனது பொதுவு உடையவர்தானே மகாத்மா எக்காரணத்தைப் பற்றி ஓர் பாரிசமாக மனதை செலுத்தி பேசினரோ;

## நந்தனார்.

இந்தஜென்மம் வேண்டாமினி
எந்த ஜென்மம் வந்தாலும் வரட்டும்.——என்றதோடு

## அரிச்சந்திரபுராணம்

புலையனும் விரும்பாத இப்புன்புலால் யாக்கை
நிலையெனுமருண்டுயிரினு நெடிதூரச்சிறந்தே
தலைசேர்தருள் சத்தியம் பிறள்வது அரிதே யெம்
கலையுணர்ந்த நீயெமக்கிதுகழருவதழகோ.

## அரிச்சந்திரபுராணம்

வேதியர்காளாய் "மின்னையும் மைந்தன்றன்னையும்
விற்றணன் யான்போய்
ஜாதியிற்கீளாம்புலையனுக்காளாய் சவம் சுடுகாடு
காத்திருந்தேன்
சோதிமண்டபத்தின் மணிந்தவிச்சேரி சுடர்
முடிகவித்து மண்புறக்கு
நீதியன்றே அர சழித்தேணினிக்க
தேனனக்கிதே என்றான்.

## அரிச்சந்திர புராணம்.

ஒன்றிலாத உயிரணையொப்பியே
பொன்றிலாத புலையனுக்காட்பட்டான்
வென்றி வேந்தினி மீட்க்க தருவனோ
என்றிருந்தனையோ வென்றியம்பினுள்.

நந்தனாரும் இந்த ஜென்மத்தை இகழ்ந்தனர். அரிச்சந்திர புராணத்தில் புலையனும் விரும்பாத இந்த வாக்கை பொன்றதொன்று ஜாதியின் கிழாம் புலையனுக்காளாய் என்றதொன்று பொன்றிலாத புலையனுக் காட்பட்டான் என்ற இந்தநான்குமொழிகளை யோசித்துபாருங்கள் சகலமுமறிந்த மகாத்மா அக்குலத்தினில் பிறக்க வேண்டுமென விருப்பம் கொண்டது எக்காரணத்தைப்பற்றியோ.

## (வாசிஷ்டம்)

பிறப்பிறப்பாய் பெயருடைய விந்தமாயைப்
பெருமையினை முடிவுபெற பேசவொண்ணு
வறப்பெரிய தன்மனத்தை வென்ருல்மாளு
மல்லவொரு வகையாலும் மாற்றலாகா

## கந்தபுருணம்

முதிதருதவமுடை முனிவராகினும்
ஓதுவருதிருவோரு போலிவராகினும்

மதியினராகினும் வலிபராகினும்
விதியினவரே வெல்ல நேர்மையார்

## (மூதுரை)

எழுதியவாரே:காநிறங்குமட நெஞ்சே
கருதியவாராமோகருமங் கருதிப்பொய்கைத்தேர்
கர்ப்பகத்தை சார்ந்தோர் காஞ்சிறங்கா
முற்பகத்தில் செய்தவினை

## தெய்வ புலவர்

அவா வென்பதெல்லாம் உயிர்க்கு மெஞ்ஞான்றும்
தவா அப்பிறப்பெனும் வித்து

அருகுவது கொண்டிங்கலேவதேனன்னே
வருவது:தானேவரும்—இன்னம்

## ஜோதிட குணாகரம்

பொன்சனிவிகடவித்துவா ணிராகு
புதியமாம்பாடியாம் கேது
முன்சொன்னபடியாம் வெள்ளி வெங்கலமாம்
மூடவனும் யெண்ணேயே விற்பான்

பின்வருமரவ மச்சமே விற்பான்
பேசியகேது மாங்குசமாம்
மின்னிடசனி யென்னை விற்பானும்
விளங்கார விரண்டு வஞ்சனையே

பதினொராமிடத்து வியாழமும் சனியும் நிர்க்கில் விகட வித்துவனும் வியாழமும் ராகும் நிற்கையில் பாம்பாட்டியாவானும் கேதுவு மப்படியேயாம் சுக்கிற நிற்க்கையில் வெங்கலம் விற்ப்பானும் வெள்ளியும் சனியும் நிற்கையில் எண்ணை விற்பானும் வெள்ளியும் ராகும் நிற்கையில் மச்சம் விற்பானும் வெள்ளியும் கேதுங் கூடில் ஆட்டு வாணியம் மாமிசம் விற்ப்பானும சனி நிற்கையில் எள்ளு விற்ப்பானும் சனி ராகு கேது நிற்கையில் வஞ்சனைதொழில் பண்ணுவன்

உ

சிவசுப்பிரமணிய கடவுள் அகஸ்திய மகாமுனிவருக்கு
திருவாய் மலர்ந்தருளிய

# சாமுந்திரிகாலக்ஷணம்

ஓர் புருஷனுக்கு மூக்கு கிளியின் மூக்குபோல் இருக்குமாகில் போகத்தை அனுபவிப்பான் உலர்ந்திருந்தால் பூரணாயுசு கத்திவெட்டுபோல் கோடுகளிருந்தால் குலஸ்த்திரிகளை கெடுப்பான் நீண்டு இருந்தால் தனவந்தன் வளைந்திருந்

தால் திருடன் தட்டையானல் ஸ்திரியினல் சொல்லப்படு வான் கெருடன் மூக்குபோல் நுனிகூரு இருந்தால் தன வந்தன் அந்தநுனி வலதுபக்கம் வளைந்திருந்தால் கொடூரமா யும் பேறுண்டியுன்பவனயும் இருப்பான் இந்த விதமாய் விதியினல்ஏற்பட்ட குணங்களையும் லக்கணங்களையும் அங் கத்தினையும் மாற்றி சீர்திருத்தம்செய்து,

## இராமாயணம்

அதிசயமொருவரா லமைக்கலாகுமோ
துதியறுபிறவி இன்பதுன்பந்தான்
விதிவசமென்பதை மேற்கொளாவிடில்
மதிவலியால் விதிவல்ல வல்லரோ

முன்னேர்கள் வாக்கியம் இத்தன்மையாய் ஒவ்வொரு வரும் கூறி இருக்க ஒருவர்க்கொருவர் மனதை சீர்திருத்தி உலக ஒற்றுமைபடுத்துவேனென்பதுஒருக்காலும் முடியாது

பாருங்கள்

## வெண்பா

வான்குருவின் கூடு வல்லறக்கன் தோல்கறையான்
தேன்சிலம்பியாவர்க்கும்செப்ப அரிதால் யாம்பெரிதும்

வல்லோமை யென்றுவலிமைசொல்லவேண்டாங்கான்
யெல்லவர்க்கும் ஒவ்வொன் றெளிது

வலிமையோடு யாம் பெரிதென ஒவ்வொரு காரியங்களை யும் சீர்த்திருத்திசுய ஆக்ஷி அடைவேனென்பது வீண்பிறை யாசை.

1925ஸு மார்சுமீ 6ஷ மகாத்மா காந்திவைகத்திற்கு செல்லும் பிறயாணத்தில் காட்பாடி ஸ்டேஷனில் சகலஜன ங்களுக்கும் தன் தெரிசனத்தை காட்டாதது எக்காறனத் தைப்பற்றியோ களங்கமற்ற பூரண பூஷண ஜீவகாருண்ய ரானபடியால்

நீர்கிழிய வெய்த வடுப்போலே மாருமாம்
சீரொழுகு சான்ரோர்குணம் இருக்க
(தெரிசனம் காட்டாததுயேன்)

1. மார்சுமீ 6ஷ மகாத்மா கன்னியாகுமரி தெரிசனத் தில்ஆலயத்துட் செல்ல அங்குள்ளவர்கள் மகாத்மாஇங்கி லாந்து சென்று வந்திருப்பதால் ஆலயத்துட் செல்லபடா தென்று தடுக்க அவர் துவஸ்த்தம்பத்துடன் நின்றுவிட்ட னர் பாருங்கள் அதுசமயம் சமணர்கள் திருநாவுக்கரசு சுவாமியை சோதிக்கும்பொருட்டு கல்லைகட்டி கடலில் போட்டவுடன்.

சொற்றுணை வேதியன் சோதிவானவன்
பொற்றுணை திருந்தடி பொருந்தக்கைதொழக்
கற்றுணை பூட்டியும் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணையாவது நமசிவாயமே [என்றதுபோலும்

2. இராமபிரான் இராவண சம்மாரம் செய்ய செல்லும்போது வருணனை வரவழைகக கர்வத்துடன் வராததால் தன் பூரண வலிமையை காட்டியவுடன்,

## இராமாயணம்

அண்டமூலத்துக்கப்பாலாதியும் கொதித்தெழுத்
தெண்டிரைகடலின் செய்கைசெப்புவனோ சென்னிப்
பண்டிநாளிருந்த கங்கையும் கொதித்தார் பாப்பான்
குண்டிகை இருந்த நீறும் கொள கொள கொதித்த
[தன்றே

மகம்மதிய சிராபுராணத்தில் பாருங்கள்

3. திமிஸ்த்தாசனுகிய அபீபுமுகம்மதுவை அழைத்து சோதிக்கும்பொருட்டு அமாவாசி இரவில் சந்திரனே வரவழைத்து இருக்குறுர்.

4. ஷாம்இராஜ்யம் போகுங்காலத்தில் பாம்பினை கொன்று, நதிகடக்க கண்ணன் என்பவன் தன்னைமதியாதிருந்ததால் அவன் மனது கலங்க சோதனை யுண்டுசெய்ததும்.

5. கறையேறி சென்றபாதையில் புலி அவருடன் வசனித்து மானிடவுருவு கொண்டதும்,

6. பின்னால் அகன்றுவரும்போது ஓர் பெரிய பாம்பு நெருப்பு பொரிகளை கக்கிக்கொண்டு இருந்ததைபார்த்து முஹம்மது யோசிக்க அங்குஆகாயம் வசனித்தது ஹேமுஹம்மதுவே உம்மை கண்டு களித்தது என கூற அவர் அப்பாம்பிற்கு அடுத்தவனம் சுகமடைவாய் என்றுரைத்தனர்.

7. ஷாப்பு நகரத்தில் அவர்மீதுகல்லைப்போட யெத்தனித்தவர்கள் கரம் அற்றதும் அவன் அவரைவணங்கி பிறகு கரம் உண்டுபண்ணிக்கொண்டதும்.

8. பின்னும் உலையிட்ட மெழுகை குளிர செய்திருக்கின்றனர்.

9 மதினமா நகரத்தில் சுறுகத்து யென்பவன் முஹம்மதுவை வெட்டவும் பலதொந்தரவு செய்தலால் அவன் குதிரை மூன்றுதரம் பூமியில் ஒட்டசெய்ததும் பிறகுஅவன் கெட்ட எண்ணம் கொண்டதால் பின்னும் முன்போல செய்தவுடன் முஹம்மதுவே தங்களைப்போல் உலகில் ஒருவருமில்லை என்று வணங்கினன்,

10. இபுராகபி நமுரூது செய்த அக்கினி குண்டத்தை பூங்காவனமாய் குளிற செய்தனர்.

11. மூசாநபி பகைவனாகிய பிறவூனுக்கு எதிரே தமது கைக்கோலை மகாபெரிய சர்ப்பமாக்கினார்

12. தாவுத்து நபி நதியில் முதலைவாய் பட்டு இறந்து போன ஒருவனுக்கு நீண்டகாலத்திற்குபின் உயிர் கொடுத்தெழுப்பினார்.

## கிருஸ்த்து

13. மத்தேயு, மார்க்கு, லூகா, தாவீது, யோவான் முதலிய 12-சீடர்கள் எழுதிய கிருஸ்துவின் சரித்திரத்தில் கிருஸ்துவானவர்

14. திமிர்வாதக்காரனை சொஸ்தப்படுத்தினர், மரித்தவரை உயிரோடெழுப்பினர், குஷ்டரோகியை சொஸ்தமாக்கினர், 5-அப்பம், 7-மீன், 7000-பேர்களுக்கு பங்கிட்டு கொடுத்தார். கேட்டகேள்விகளுக்கும் பதில் சொல்லி இருக்கிறார்.

15. பிறவிக்குருடர்களுக்கும் பார்வையுண்டாகும்படி செய்து இருக்கிறார். பாருங்கள்

இந்தவிதமாய் ஒவ்வொருவரும் சோதனைகாட்டியபடி மஹாத்மாகாந்தி காண்பித்திருக்கும் விஷயத்தில் உலகம் ஒற்றுமையாகி சுய ஆக்ஷி கிடைக்கும். மகாத்மா கதிராடை ஒன்றையே கைபற்றி நீண்டாதொழிய வேண்டுமென்று கூருவதினால் சுய ஆக்ஷிகிடைக்குமா ஒருக்காலுங்கிடைக்காது.

## இக்கால நிலமை.

உண்டானபோது கோடான கோடிஉறமுறைகள்
தொண்டாகவந்து தொழுதுகொள்வார் செல்வம்சிந்தி
[விட்டால்
கண்டாலும்பேசார் அழைத்தாலும்வாரார் கவைக்
[குதவா
சண்டாள உறமுறைகள் ஆகாதுகாண் ஆகாதுகாண்
[ரெத்தின சபாபதியே

## வெண்பா

"கல்லானே யானாலும் கைப்பொருளுண்டாகில்
யெல்லாரும் வந்திங்கெதிர்கொள்வர்——இல்லானை
இல்லாளும் வேண்டாள், மற்றீன்றெடுத்ததாய்
[வேண்டாள்
சொல்லாதவன் வாயிற்சொல்"

## அறப்பளீசுர சதகம்

மேலானஜாதியி லுதித்தாலுமதிலென்ன
வெகுவித்தை கற்றுமென்ன
மிக்கவதிரூபமொடு சற்குணமிருந்தென்ன
மிகுமானியாகியென்ன
பாலானமொழியுடையனு யென்னவர்ச்சார
பரனுயிருந்தென்ன
பார்மீதுவீரமொடு ஞானவானுயென்ன
பாக்கியமிலாதபோது
வாலாயமாய்பெற்ற தாயும் சலித்திடுவர்
வந்தசுற்றமு மிகழுமே
மரியாதையில்லாமலனைவரும் பேசுவார்
மனைவியும் தூறு சொல்வாள்
ஆலாலமுண்ட கனிவாயனே நேயனே
அனகனே அருமைமதவே
எனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீசுர தேவனே

## விவேகசிந்தாமணி

"குணமிருந்தாலும் குலமிருந்தாலும் கொழுந்தமிழின்
மணமிருந்தாலும் மதியிருந்தாலும் வழுத்தியவர்

கணமிருந்தாலும் ஒருகாசுபோதா சிங்காறவரைப்
பணமிருந்தால் அவர்களெல்லா மஞ்சலிபண்ணுவரே"

என்னபதுதான் இக்கால உண்மை விளங்குன்றது.

தவிர காங்கிரசுக்கு முதன்மையான மகாத்மா காந்தியே இக் காங்கிரசைவிட்டு விலகிவிடவேண்டுமென்று சொன்னதாகவும், (18-5-25)ல் ஸர்த்தராவில் நடந்த மஹாராஷ்டிர மகா நாட்டில் ஸ்ரீமான் தேச்முகி அக்கிராசனர் மஹாத்மா சொன்னதை கண்டிக்க முக்கியமான இடங்களில் பொதுக் கூட்டங்கள் யேற்பாடாய் இருக்கின்றதுவென கூரினர். அதை யோசித்து வீண்கலகம் செய்யாமல் அனைவர்களும் கடவுளை தியானித்து முன்னோர்களுடைய வரம்புகடந்து நடவாமலும் இருப்போமாகில் மழைமாரிபெய்து உலகம் செழிப்புற்று சகலரும்நன்மை அடைவோமென்பது உண்மை

அடியேன் சிற்றறிவுக்கெட்டியவாறு உறைத்திருப்பதில் குற்றம் குறைவு இருந்தால் பெரியோர் சிரியோர்களும் குற்றத்தை நீக்கிகுணத்தை பாராட்டும்பொருட்டு என்னிரு கரம் சிரமேற்குவித்து வணங்கினேன்.

---

# அவையடக்கம்.

## கவி விருத்தம்.

நாவலர்கள் பாவலர்கள் நால் வகையுந்தானுணர்ந்தோர்
சேவடியை தான்பணிந்து செந்தமிழால் மன்னவன்மேல்
ஆவலுடன் பாடலுறும் மாகமத்தின் குறையிருப்பின்
பூவர்களும் தான்பொருக்க போற்றினேன் பொன்னடியை

## பாலாபிஷேக பழனிமலையப்பன் எ. வ. மே.

இராகம்-சிந்துபைரவி-தாளம்-சாப்பு.

பல்லவி.

சாரதா பீடச்சரப முத் து திரு
சங்கர தாச சாமியோ டொத் து
வீரன் வேல்சாமி வேதாந்த சத் து
வேணும் பாஸ்கர சாமிக்கருத் து (சா)

பத்தரை மாற்று பசும்பொன்னின் தங்கம் இதோ
பாருமுலகினில் சங்கர லிங்கம்
யெத்திசை யோர்புகழ் மாமுத்து லிங்கம்
ஏற்கும் தமிழ் பீர்முஹம்மது சங்கம் (சா)

வித்தகனும் வேலூர் நாராயண சாமி (நே)
விளங்கும் நல் சந்தான கிருஷ்ணனும் பூமி
முத்துகவி சுப்பருயலாம் நேமி
முக்கனியாக துலங்கிடும் பூமி (சாமி

பெரியோர் சிரியோரை போற்றிடும் நேசன் எங்கும்
பிறபல்யமாகா சிரந்த நல் வாசன்
திருநைநகர் சின்னசாமி வுல்லாசன்
செந்தமிழுக்கருளான பிற காசன் (சா)

அண்ணாமலையார் துணை.

இந்தியா

# இராஜேந்திர திலகம்.

## விநாயகர் வெண்பா.

ஜார்ஜூ நம் மன்னன்மேல் சார்ந்த திருத்தான் திலகம்
பூர்த்தியாய் என்னுவிற் புகன்றிடவே—கீர்த்தியுறக்
கந்தனுக்கு முன்பிறந்து கனிக்குவலமாய் வந்தத்
தொந்தி கணபதியாம் துணை.

## சரஸ்வதி வெண்பா.

வாணிசரஸ்பதியே வாசாமகோசரியே
கூணியுரு மாமதியே கோரினேன்——ஆணித்
தேனினிய மன்னவன்மேல் செந்தமிழின் பாவாவாய்
தோனிடுவாய் யென்னுவிற்சொல்

## வேலன் வெண்பா.

பாலவடி வேலவனே பார்வதியின் புத்திரனே
கோலம்பில் மீதேருங் குன்றேனே—சீலமுறும்

பாக்களுடன் மன்னவன்மேல் பாடுதற்கு—மாருமல்
காக்க கடனுமக்கு காண்.

## மகாவிஷ்ணு வெண்பா.

கண்ணேக்கமுற்றவிடங் காரணனுய் தான்விளங்கும்
மண்ணேக்கம் வைத்ததிரு மாயவனே-விண்ணேக்கர்
கொண்டாடும் ஜார்ஜுநம் கோமான்மேல் சங்கீதம்
உண்டாக செய்திடுவாய் முன்.

# தாதாபாய் என்ற வர்ண மெட்டு.

இராகம்-தேசிக்தோடி-தாளம்-ஆதி

பல்லவி.

இராஜாங்கம் - நமது - நல் இ.ராஜாங்கம்
நாகரீகத்துக் கோராதாரமானதோர் (இரா)

அனுபல்லவி.

வாசாமகோசரம் வானோர்புகழுந்தரம்
வஞ்சகமானவர் நெஞ்சங்கலங்கிட
அஞ்சாமலே சிறைதன்னி லடைத்திடும் (இரா)

தொஹைரா.

சட்டகௌர்மெட்டென திட்டமிட்டுலகினில்
சராசரம் போற்றுமெங்கும்
கட்டாயமாய்திர்ம் மிட்டதோர் கட்டளை
காசினியெலாம் துலங்கும்

அனுபல்லவி எடுப்பு.

திருவளரான நேமி சின்னசாமிக்கியானபூமி
திங்களொளியென எங்கும் விளங்கிட
சங்கரன் தன்னருள் பெற்றவதிசய. (இரா)

---

## லோகமான்ய பால கங்காதர திலகம் என்ற மெட்டு.

இராஜாதிராஜனைந்தாம் ஜார்ஜு மன்னனைபோல்
நலமாயுலகிலுண்டோ காப்பவரவரைப்போல்
பூஜாபலம் செய்தநல் புண்ய பலத்தினல்
புவியிலெதிர்த்தவரை யடைக்கிறுர் செயிலினில் (இரா)

தொஹைரு

தேசத்திலுள்ள பேரனேகர்கள் கூடியே
ஜெயித்திடலா மெனறுநாடியே
மோசத்துவேசமா யாசித்துவீரர்கள்
முடியாமல் தான் வாடியே.

பல்லவி எடுப்பு.

மன்னாதி மன்னர்வெகு பேர்களெதிர்த்தாரே
தன்னால் முடியாமலே தயங்கி ஓடினாரே
என்னாளுமே ஆவரை யெதிர்க்கமுடியாது.
இது தெரியாமல் பாடுபடுகிறார் புவிமீது

தொகையறா.

அன்புருவானதோர் நண்பர்கள் தங்களே
அறிவீர்சள் புவியின்மேலே
தென்பது கொண்டுதன் வண்பாகளானவர்
தீரமாய் நிறன் தாலே.

பல்லவி எடுப்பு.

ஒருவரால் முடியாது உகந்தனில் இப்போது
சிறுவன் சின்னசாமிசொல் செந்தமிழும் பொய்யாது.

---

## தேவாதிதேவா ஜெயவல்லவா என்ற வர்ணமெட்டு.

இராகம்-பியாக்-அட தாளம்.

பல்லவி

இந்தியா சக்கிரவர்த்தி சொற்படி நாம்
எல்லவரும் நடந்தா லப்படி

இந்த கலகம் வாரா திப்படி
எண்ணுவீர் மனதி லுள்ளபடி (இந்)

நாடெங்கும் சுற்றியே பார்த்தேனையா நம்
ராஜனால் நன்மையாய் தோணுதையா
நீடோங்குலகினில் பாருமையா
நீங்களென்றுமே வாழ்வீரையா (இந்)

அரசனதிகாரம் மெங்குமுண்டு அதை
ஆண்டறிந்தவர்க்கே நன்மையுண்டு
புருஷ லக்ஷணமெவர்க்கு முண்டு
போது இகழ்வோர்க்கு தீமையுண்டு (இந்)

எத்தனை கூட்டங்கள் கூடினாரே நம்
இங்கிலாண்டறசை யெதிர்க்கநேரே
முற்றிலுந் தான் முடியாது பாரே
மொழிந்தேன் சின்னசாமி சொல்லின் கூரே (இந்)

---

## குமரனையேபாடி கொண்டாடுவோம் என்ற மெட்டு.

இராகம்-அமிர்தகல்யாணி-தாளம் ஆதி

பல்லவி

மன்னாதி மன்னன் நமது இந்தியர் தேசாதி மன்னன்
தன்னுயிர்களைப்போலே தானே காத்திடுந்தீரன்
பொன்னுலகாதியந்தம் புகழுந்தயாள தாரன் (ம)

தொகையறா

சீர்பெற்ற வுலகினில் பேர்பெற்று விளங்கிடும்
நமது இண்டியன் சக்கிரவர்த்தி—அவர்
யேர்ப்படுத்தும் சட்ட ரூல்படிக்குட்படா தெதிர்த்து
செய்பவரார் நிவர்த்தி.

பல்லவி எடுப்பு

கதர்கை தாமோ கண்டிக்கப் போமோ
இதமுடன் இன்னசாமி இயம்பும்மொழிபொய்யாமோ ()

---

வடிவேலா நீ துணையே என்ற வர்ண மெட்டு.

பல்லவி.

தீனரக்ஷகனே நம்
தேச—இந்திய—ராஜ—சுந்தரன் (தீன)

அநுபல்லவி.

ஞானபோத சோதர்திரு நாமவரை தூஷிப்பது
நானிலத்தடுக்காதிது
நாம—ரூப—ஞாய் விளங்கும். (தீ)

காரண கடவுளென்று கருத்தினிலெண்ணுமல் நின்று
போராடத் துணிந்திரின்று
போது ஞாய மாகுமோ தான். (தீ)

பாவத்துக் காளாகாதிர்கள் பாரினில் யோசிப்பீர்
சாபத்துக் கேளுகுநீர்கள் [நீங்கள்
தார கார நாம னென்னும் (தீ)

திருசிராபதியின் நேமி செந்தமிழின் சின்னசாமி
உருதியாய் நம்பிடும் பூமி
வோதும் வேத கீத நாதன் (தீ)

---

# இராணியம்மாள் மீது.

## சித்தாதி தேவர்கள் நித்தம் நித்தம் என்ற மெட்டு.

கன்னி.

காலஞ்சென்ற நமதிங்கிலாண் ராணியைப்போல்
காணுமுலகில் கீர்த்தி அடைந்தவரார்
தோணும் புவியில் மூர்த்தி. (கா)

பாலர்களெல்லாம் செழிக்கநல்மாதாவாய்
பாருலகிலுதித்து உலகமெங்கும்
சிறாறவே போதித்து. (கா)

காலனைப் போலெங் தெதிரியா ளுனுமே
காணும் செங்கோல்பிடித்து அவர்களுட
ஆணுவத்தையொடித்து (கா)

சாலோப சாரூப சாயுஜ்ய மாயீசன்
தன்னு லரசையாண்டு நலமதான
பெண்ணாய் பிறந்தாள் நன்று (கா)

இந்தியாவில் தபாலாபீஸ் களுங்கட்டி
யேர்ப்படுத்தியே தந்தி அடித்திடவே
சீர்படுத்தினுள் முந்தி. (கா)

சந்தேகமானதோ ரேந்த தேசத்திலும்
தானேயரிய வன்னம் கடிதமூலம்
காணவெளிதே இன்னம். (கா)

யெந்தயேழைக்கும் தகுந்த தர்மாஸ்பத்திரி
யெங்குங்குந்தாநேர்படுத்தி வைத்தாளன்று
மங்களமாய்திருத்தி. (கா)

வந்தே மாதரத்தா விந்த விதமாக
சொந்த தர்மந் தானுண்டோ சின்னசாமி
செந்தமிழைப்போலுண்டோ (கா)

## ஸ்ரீராம பாதமா என்ற மெட்டு.

பல்லவி.

ஜாதியின் பேதமே தானுண்டு மதமே
தாரணியிலேன் வாதமே—நின்போதமே (ஜா)

அனுபல்லவி.

ஓதிடலாது உண்மைமாராது
உத்தமநற்குணமுள்ள வித்தகாரிந்திடில். (ஜா)

அனுபல்லவி எடுப்பு.

சகலஜீவகோடி தான் வெவ்வேருய்நாடி
தானிருக்கவே வுலகில் காணிடபுல்பூண்டுமுதல்()

சின்மயானந்தன் திருவுள சொந்தன்
சின்னசாமி போற்றும்திரு அன்னலாலுறுபெறுநல் ()

---

## மகம்மதியர்குலத்தில் மாணிக்கமாய் விளங்கும்

என்ற வர்ணமெட்டு.

பல்லவி.

இந்தியா நமது நல்லேந்தாம் சக்ரவர்த்திபோல்
யெந்த வுலகுனிலுமுண்டு—யேர்படுத்துமோர்
மூந்து சட்டத்திற்கு ரெண்டு

முடுக்கு.

இகபரமீதினி லவரொரு யீசனாய்
சகலகலைகளு மோதிடுவாசனாய்
இப்பிறபஞ்சத்திலுதித்தார் தனைபுகழ்ந்
தொப்பநல் கீர்த்தியும் பெற்றார். (இந்)

ஜர்மன் ருஷியா ஜப்பான் பர்மா தேசாதிருபர்கள்
சகலருந்தா னெதிர்த்தாரே—முடியாமலே
தகமைகொண் டோடிவிட்டாரே.

(முடுக்கு)

தரணியி லிதையரிமாமலே சிலபேர்கள்
கருணையிலானென கூரியநேகர்கள்
சற்றும் யோசியாமலையா மானவெட்கமும்
அற்றார் ஜெயிலில் பாரையா. (இந்)

இங்கிலீஷ் கொடியைமாற்ற எங்கும் காங்ரஸ் கூட்டம்
யேர்ப்பாடு செய்தாலுமென்ன—சுயாக்ஷிகொடி
சீர்ப்படுமோதான் பார் முன்னு.

முடுக்கு.

இதமொடு காந்தியை துதியுறவாணவர்
சதமென அவருடன் சகியெனயோகரமன்

இன்னம் கதைகள் பேசுறார்—காலம்போக்கியே
முன்னம் கைகளை வீசுறார். (இந்)

ஜாதி யொற்றுமையென்ற நீதிவான்களே நீங்கள்
தான்கலந்துக் கொள்ளாமலே—சபையில் நின்று
வீண்வாதம் செய்குறீர் மேலே

முடுக்கு.

சந்தன குங்குமமுங் கலபம்மொடு
வந்தனமும் தினமனதொடு கணமொடு
சங்கீதமான வாசமே—சின்னசாமிசொல்
எங்கும் புகழுந்தேசமே. (இந்)

---

## மனதேமகிழாதே புவியில் மயங்கி திரியாதே எ. மெ.

பல்லவி.

கதரையுடுத்தாதே இடையில் கலங்கிதிரியாதே
சொன்னேன் நான் (க)

சதமென்றுடுத்தினேர் தானே அநேகம்பேர்
சாரமில்லாமல்போச்சே
சகலர்க்கேச்சே (க)

பல்லவி எடுப்பு.

ஆயிரத்தி தொளாயிரத்தி இருவத்தஞ் சான-மே-பத
[நெட்டில் 'சுதேசன்'

நேயபானதொரு நீண்டநல் பேப்பரில்
சாயம் வெளுத்துபோச்சே
நிலையின் பேச்சே. (க)

காந்தியும் காங்கிரசை விலகிட காண வுரைத்தாரென்று
பம்பாயின்

பாந்தமகா நாட்டில் பாரும் தேச்முகி கூட்டில்
சாந்தபிரசங்கமாச்சே
தாழ்வதுமாச்சே. (க)

திருவளரானபூமி. திருசை செந்தமிழ் சின்னசாமி
நல் நேமி

இருகரமும் குவித்து இருபாதமும்சேவித்து
இசைத்தபதமறிவீர் (க)
புவியிலோர்.

———

180426 · 51

# ஆதிகடவுளுக்கு ஆரிட்த்தில்

பேதமில்லை என்ற வர்ணமெட்டு.

பல்லவி

நீதியுள்ளோரே———மனதை
சோதித்துபாரே.

அனுபல்லவி.

ஆதியொருவனாலே ஆகுவகை தானிருக்க
பாதியிலே உலகத்தார்கள் பாடுபடுரார்குருக்க (நீதி)

காந்தி காந்தியென்று கதராடை தானுடுத்தி
சாந்தகுண முடையோர் தான்ஜெயிலுக்கேகலாமா (நீ)

கப்பலில் ஏரலாமா காந்திரயில் வேரதாமா
ஒப்பக்கண்ணுடியாமா உருவத்தை பிடிக்கபோமா (நீதி)

கதராடை தைப்பதற்கு காந்திஊசி நூல்வேருண்டோ
யெதிரி யென்று நின்றாலே எல்லாம்வேருகவேண்
[டும். (நீதி)

இங்கிலீஷ் ஜர்மனூசி இல்லாமல் தானிருந்தால்
மங்களமாய் தைப்பதற்கு மார்க்கமுண்டோ கதரா
[டைக்கு. (நீதி)

சோப்பா கட்டினில்குந்தும் சொகுசான சுதேசியரே
சீப்பாச்சட்டங்கள் பூட்ட நேருமாணிவேருமுண்
டோ (நீதி)

நூத்தி நாற்பத்திநாலு நோக்கிடும் நல் செக்ஷனதை
மாத்தி நடப்பதற்கு மார்க்கமுண்டோ கதராடைக்கு ()

எத்தனையோ லக்ஷமையா யேற்பட்டது காந்திநோட்டு
அத்தனையுமரைக்காசுக்கு ஆகாதவமானமாச்சு (நீதி)

பம்பாய் கல்கத்தா முதல் பாடுபடுறார் காந்திக்கு
நம்பிக்கை தானிருந்தால் நாடெங்கும் துலங்கிடாதா()

திருசையின் சின்னசாமி செப்பும் தமிழ்படியே
உருதியுடன் நடப்பீர் உத்தமகுணதிபெரும் (நீதி)

---

## ஆனந்த மானந்த மானந்தமே பர

என்ற வர்ணமெட்டு.

இராகம்-இந்துஸ்தான் தோடி தாளம் ஆதி.

பல்லவி.

பாருங்கள் பாருங்கள் பாருங்களே நன்றாய்
பாருங்கள் பாருங்கள் பாருங்களே
பாங்கான பெரியோர்களே.
காங்கிரசின் கூட்டங்களே. (பா)

அனுபல்லவி.

ஆரியரோடு அனைவர்கள் கூடி
ஆதிதிராவிடர் யென்றுற வாடி
மீறிய வார்த்தைகள் தான்திர மாடி
மீசைமுறுக்கிறார் சுதேசர் கோடி (பா)

காப்பிடையும் தோசை உப்புமா தின்று
காங்கிரஸ் கஸ்தூரி ஆய்யங்கா ரென்று
பேப்பர்களை கையிலெடுத்து நின்று
பேசிடுவாரவர் பிரபல்ய மென்று (பா)

கதிராடை மெய்யென்றுடித்தினவர் சிலர்
கஷ்டம் வந்தாலதவிழ்த்திடுறார் பலர்
இதிலென்ன பிடிவாதமென்று கேட்டாலவர்
எல்லாமெனக்குத் தெரியுமென்பார் ருளர் (பா)

காங்கிரஸ் கமிடிக்கு மெய்யானோரே நீங்கள்
காந்தியின் நோட்டுக்கு சில்லரை தாங்கள்
பாங்கான செந்தமிழ் சின்னசாமி யுங்கள்
பாகமறிந்து பாடின துணருங்கள். (பா)

## காந்தி மகான்போலுண்டோ ஜீவகாருண்யமே.

இராகம்-தேசிகதோடி-தாளம்-ஆதி.

பல்லவி

கதர்—காந்தி உடை தரிக்கும்
கனவான்- நீங்களே
குணவான்- தாங்களே
தனவா- நீங்களே—கதர் (கா)

அனுபல்லவி.

பார்தமுண்டாச்சு பருத்தியின்பேச்சு
பார்ப்பவர்க்கொருகாக்ஷி-சுயராக்ஷி
அது சாக்ஷி யென்று- கானுலகில் (கா)
பாரும்உன்னுடைபோலே
தங்கள்பாரிகட்டிடதாலே
பாலித்திடவே சித்தனர்
கேலிக்கிடமாயயுற்றனர்
பங்கம் இது யெங்குமுன
தங்கம் நிலே கங்கணமாய். (கா)

திருவையின் பூமி செந்தமிழ்நேமி
தேன் கழிந்திடும் வாசன் - குணபூஷண்
அதிநேசன் - விசுவாசன்

கல்வி-திரமுடையவர் பாலன்
செல்வஉறமுடையவர் - சீலன்
கணம் செப்பும்படி ஒப்பிடவே
இப்புவியில் அற்புதமாய்
தேடிவுங்கள் பாதமதை
வேடிக்கையாய் தானுரைத்தேதன். (கா)

---

## பாலராமனையனே என்ற வர்ணமெட்டு:

இராகம-தோடி-தாளம். ஆதி

பல்லவி.

காலம் கலி காலந்தான்——நம்மை
கார்க்கும் நமது நல் ஜார்ஜை யிகழ்ந்திட (கா)

அனுபல்லவி.

சீலமுடனே சிறந்த பெரியோரே
சிந்தையில்தான் நீங்களெண்ணுமலும் பாரே
கோலமான வார்த்தை கூறியும்தானேரே
கூசாமலே ஜெயிலுக்குள்
ஆசான்களும் போகின்றாரே (கா)

யெத்தனையோ விதத்தாலும் எண்ணிபாரு
இங்கிலீஷ் ராஜியத்தால் யேற்படுமே சீறு
மிந்தையான வார்த்தையேனோ அதைகூறு
மேலானதோர் பெரியோர்களே
வேளைதனிலரிவீர்களே. (கா)

இந்தியாசட்ட ரூல் இல்லாமல் போனாலே
யெவர்க்கு யெவர்தான் மதிப்பார் புவிமேலே
சொந்தமனைவிதான் னென்றும் பாராமலே
ஷோக்கான தோர் ராசாமிகள்
போக்காகவே நிற்பார்களே (கா)

சத்தியநிலமை ஸ்டாம்பிலிருக்குது
தானரிந்து பாரும் தெரியும் வுங்கள்கது
சித்திக்க செந்தமிழ் சின்னசாமியிது
தேசத்திரு வாசர்க்கு
நேசத்துடன் சொன்னதிது. (கா)

---

# இராமபஜனஹோதியாம் கமலமுஜ

என்ற வர்ணமெட்டு.

இராகம்-இந்துஸ்தான்தோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

அலங்கார ரூப சந்திரனே——நமதுமன்னன்

அனுபல்லவி

கலங்கா மனதுடையேன்-காருண்ய மாவிடையோன்
உலகெங்கும் புகழ்தாரனே- நமதுமன்னன் (அ)

சத்தியநிலேதவரான் தனதுயிரைபோல் கார்ப்பான்
நித்தியானந்ததாரனே நமதுமன்னன் (அ)

இந்தியாவைப்போற்றையா இருக்குது சுகமையா
சுந்தர சுகாதனேயா நமதுமன்னன் (அ)

சீர்திருத்தமுடையோன் சின்னசாமி.போற்றுவோன்
ஆர்க்குமஞ்சாத தீரனே நமதுமன்னன் (அ)

---

## மாரன் வாதையினுல் எ. வ. மெ.

இராகம் பைரவி தாளம் ரூபகம்.

பல்லவி.

கோபங்கொள்ளாதீர்கள் நான்
கூரி இருக்கும் ராஜேந்திரதிலகத்தில் (கோ)

அனுபல்லவி.

பாவலர் நாவலர் பாதம்யான் பணிந்து
பாரும்.உலகினில் பலர்கருத் தறிந்து
பூவர்களும்: கண்டு:தெளிந்திட அறிந்து
போது இச்சங்கீதம்
ஓதினேன் புரிந்து (கோ)

கதராடை மாத்திரம் சனமா யணிகுறார்
கழுத்து கைக்கு வேறு பட்டிசைபோடுகிறார்
சதிருடன் மோட்டாகார் சைக்கிளும்வருறார்
தாநயல் நாட்டுதன்
சாமானென் றிசழுறார் (கோ)

கையினில் பௌண்டின் பேனு இடலாமா
கண்ணுக்கு கண்ணாடிதான்லோது வாமா
வெய்யிலுக்கும்அந்தகுடைபிடிக்க போமா
வீசையழகாக
வெட்டகத்திரி யாமா (கோ)

சாந்தகுணமுள்ள சர்ஜனரே நீங்கள்
தனக்குத்தானே நன்றாய் யோசித்து
பாருங்கள்
பாந்தமுடன் சின்னசாமி தானு முங்கள்
பாதம்பணிந்து
பாடின துணருங்கள் (கோ)

# வெள்ளிமலை யொத்தபல மேடை

என்ற வர்ணமெட்டு.

இராகம் செஞ்சுருட்டி தாளம் ஆதி.

பல்லவி

அத்தியந்தமான பெரியோரே இங்கிலீஷ்
அரசாக்ஷியாயிருந்தும் பாரே அவர்
அந்தந்த மதஸ்தர்களின்
சிந்தைநோகாமலும் வைத்தாரே (அ)
புவியோரே.

ஜாதிபேத ஆலயங்களுண்டு அந்த
தன்மையையறிந்து செய்தார் நன்று
சத்தியநிலைமையுள்ள திரு
உத்தம குணநிதிபதி யென்று (அ)
குணமுண்டு.

ராஜ்ஜியத்தலங்காரநல் தாரன் மிக
ராணுவப்படையுடைய தீரன் அர
சாக்ஷியில் சிறந்ததொரு
காக்ஷியாய் விளங்கு மெய்யாரன் (அ)
மெய்யூரன்.

தித்திக்குந் தேனமுர்தமெல்லார்க்கு திருசை
இன்னசாமி செந்தமிழின் வாக்கு நலம்
செப்பும் மொழிக் கற்புதமாய்
இப்புவிதனிலுமரிந் தோர்க்கு (அ)
நினைப்போர்க்கு.

## தந்தான தானன தானன வந்தாடும் மாமயில் வாகன எ. வ. மே.

பல்லவி.

வந்தேதகல் மாதர சோதர முந்தா கதிராடையணிந்தனர்
வாய்த்திடுமோ
இராஜ்ஜியமே
வஞ்சம் கொண்டது
நெஞ்சம் அடையுமோ
கொஞ்சம்
வரியதிரவுலகினில்
வாடுகிறீர் மிக வாடுகிறீர் வாடுகிறீர்

பல்லவி எடுப்பு,

கொண்டஓர் எண்ணமும் கூடுமோ தொண்டர்கள்
படையது நாடுமோ குணமுடனே
மனதுடனே

குடைக்கதிபதி—உலகினையாண்டிடும் அவனென மனதினில்
படைத்தோனைத் துதி
பார்-மேல்-சுகமடைவீர்-சுகமடைவீர்-சுகமடைவீர்
சத்யா கிரகத்தினிலானவர் எத்தனைபேர்களிருந்தனர்
சாரமென்ன
பேருமென்ன
ஜடத்திடவரார்—பாகதியிதுவென திரமுடன் நலமதாய்
நடத்திரமுரூர்
ஜாதி-ஒன்று-தாமெனவே-தாமெனவே-தாமெனவே. (வ)

எங்கும் தமிழ் யோங்கிடும் வாசனனன் மங்களம் தங்கிடும்
பூஷணன் இவனெனவே
புவிதனிலே
இணக்கமுடையவன்—துதிசின்ன சாமியென அனைவரின்
வணக்கமுடையவன்
இசை-வுரு-பதமரிவீர்-பதமரிவீர் பதமவீர் (வ)

# தாகம் தீர்க்கும் தடாக சோலையொரு

பாகம் என்ற வர்ணமெட்டு.
இராகம் செஞ்சுருட்டி தாளம் ஆதி.

பல்லவி

இராஜாங்கத்தை இகழ்ந்து தூஷித்திடலாகுமோ
தேசாதிருபர்களே நீங்கள்
சமணிகரமாகிய பூமானெனவே விளங்கும் (இ

அனுபல்லவி.

பூஜாபலஞ் செய்தநல் புண்ணிய பகவானென
நேசர்களே மனதினில் யோசித்திடாமலே நின்று (இ)

அனுபல்லவி எடுப்பு.

தனக்கெதிரில்லா சங்கம் தடுத்தவீரர்க்கு சிங்கம்
குணத்திலநேகதங்கம் குவலயம் புகழெங்கும் (இ)

தரும சொருபானந்தன் தயாநிதியான சிந்தன்
அருமறை யோதுமெந்தன் அவனியோர் போற்றும்
[விந்தன். (இ)

திருசைநகரின் பூமி செந்தமிழருளின் நேமி
உருதியின் சின்னசாமி உள்ளன்பான தொருநேமி. (இ)

---

# செந்தில் குமரவேலுண்டு.

என்ற வர்ணமெட்டு.

இராகம் பார்சி கரகர பிரியா தாளம் ஆதி.

பல்லவி.

அஞ்சு பஞ்சபூதம் சாக்ஷி——கம்
அரசாக்ஷி (அ

## அனுபல்லவி மகுடம்.

ஆகமங்கள் முதலோதிய பெரியோர்கள்
சாகரந்தனில் மனதிடமறிவீர்கள் (அ)

ஆரதாரமுதலானதோர் நிலையொடு
மாருபடா திருகரணங்கள் நால்வோடு (அ)

அந்தரங்கமுச்சத்தியாம் நடு
சந்தேககித்திருந்தா லதைத்தொடு (அ)

ஆக்கைநமக் கொரு போதுநிஜமல்ல
நிக்கியெமன் கொண்டுபோவானுயிர் மெள்ள (அ)

## சரணம்

எண்சாணுடம்பினில் யோசித்து பாரு
இகபர சுகத்திற்கும் கடவுள்தான் கூரு
செஞ்சல் மொழியின் சின்னசாமியின் சீரு
ஜெகமதிலனைவர்க்கும் சுவைதரும் நேரு (அ)

## ஆஞ்சநேயர்

# யேது நான் செய்குவேன் எனக்

ஒன்றுந்தோணேன் என்ற மெட்டு.

பல்லவி

அதிசயமுடன் கதிராடையணிந்திடும்
அரியோர் பெரியோர் உரியோரே
நிதிதவரீர்கள் மதியுடையோர்கள்
நித்தமும் சித்தமென்
உத்தமர் பத்தியாய் (அ)

பல்லவி எடுப்பு

உரமுடனரசனை திரமுடனெதிர்த்தவர்
உரிய நலமுற்ற வரார் பாரும்
சிறையில் அடைந்தனர் தியங்கிமயங்கினர்
செப்பினேன் மெய்பட
ஒப்புடன் இப்புவி (அ)

காங்கிரசார்கள் பாங்குடன் பேர்கள்
கனமாய் பேசுகின்றார் வெகுநேர்கள்
ஆங்கவருமதை அறிந்திடாமலிதை

அலேகிறார் நிலேயிலார்
கலேயுணர் தலேயனர். (அ)

திருசைநகரின் சின்னசாமி செந்தமிழன்
திருவழுகிய பதமிதுவெனவே
அனேவரும் கார்ப்பீர் அரசினே மதிப்பீர்
அன்புடன் இன்பமாய்
நம்பிடில் தென்புரும். (அ)

---

## கனிகள் பரித்துநாம் வருவோம் என்ற மெட்டு.

பல்லவி.

குயின் விக்டோரியா ராணி இந்த
குவலயம் புகழுபி மாணி
தைரியவீரி-சமர் கெட்டிக்காரி
சந்ததம் சிந்தையில்
சுந்தரமாக விளங்கும். (கு)

பல்லவி எடுப்பு.

சகலரும் போற்றிடும்மாது நம் தயாநிதியாகுமிப்போது
புகழுறுமானுள் புவியில் தாயானுள்
போதிருமாதிவள்
ஜோதியாய் விளங்கிநிற்கும். (கு)

உலகம் மதித்திடுகல் கீர்த்தி நல்உத்தமியாகிய மூர்த்தி
இளகியமனதாள் இகபரம் நிதியாள்
எந்தயாம் தந்தையே
சிந்தித்தோர்க் காதாரமுறும் (கு)

செந்தமிழ்பாலன் சின்னசாமி மிக தித்திக்க அமுர்த
[மொழிநேமி
இந்தியாமாது இவளுக்கிணையேது
என்னாளும் அன்னலாய்
தன்னுயிறை போல்கார்த்திடும். (கு)

---

# காலத்தைபாரீர் கலிகால கொடுமை

யின் கோலத்தை கேளீர் என்ற வர்ணமெட்டு.

பல்லவி.

பாரிலுள்ளோரே நம் பாராளும் மன்னனை
தூரிநின்றீரே அய்யா (பாரி)

அனுபல்லவி.

மீறிபேசினதால் மேதினியில் பாரு
மாரிகுறைந்துமே வாட்டமுற்றோம்சீரு (பாரி)

ஆரியரோடு அநேகர்களும் கூடி
ஆதி திராவிடர் என்றுவுர வாடி
நேசில் காந்தியுடை கட்டுவோமென் ருடி
நேரிழையான மனைவியை கொண் டாடி
யெழுநூத்தி மல்லு—ரவிக்கையிடசொல்ல
யேர்க்குமோ புல்லு அய்யா (பாரி)

தன்னுடைபோலே தன்மனைவி யுராமலே
ஜாக்கிட்டு ஷோக்காய் வுடுத்தசொல்லி மேலே
அன்பு பாராட்டிதன் ஆங்கிரி சிப்பாலே
அழகான முகத்தையும் துடைக்கிரீர்ரதனாலே
இது என்ன விரதம்—இருவர் மனமொத்து
இருந்தாலே சுரதம். ஆய்யா (பாரி)

சார்ந்தப்பெரியோர்கள் ஜாதி வகுத்ததை
சற்றும் நினைக்காமல் பேசுகின்றீர் கதை
பாந்தமுண்டாக்குரீர் பாப்பான் பறையனை
பகருவேன் பின்னால் வருகுமே பெரும்வாதை
யோசிப்பீறையா —வினைஉலகத்தை
கெடுக்காதிர்மெய்யா. அய்யா (பா)

காந்திக்கு ஜே யென்று கத்துரீர் வாய்னாலே
கருத்து உண்மையாக இல்லையவர் மேலே
பாந்தமிந்தபடி இருப்பதால் புவிமேலே
பாரில் சுடீர ஜ்ஜீடம் ஒருசாதொருக் காலே

சொன்னேன் கோபமோ- வெகுசெர்குசான
முன்செய்ததப மோ [பெரியோரே(பா

பருத்தி பஞ்சை நன்ருய் பார்ச்கீர் பெரும்பாலும்
பாரும்மணிலா கொட்டையோடு இன்னம்மேலும்
குரித்து போவதினுலே குணமில்லேயோ கேளும்
கோபம்வேண்டாம் சின்னசாமி சொன்னதாலும்
சிரியவனேயா செப்பும் மொழியில் குற்றம்
பொருப்பீர்கள் மெய்யா. (ப)

---

# பாலராமனேயனே எ. வ. மெ.

இராகம் தோடி தாளம் ரூபகம்.

பல்லவி.

இந்தவுடல் சதமாய் நம்பி
யேதுக்காகவாது செய்குரீர்திரமாய் (இ

அநுபல்லவி.

எந்தநாளும் நாமிருப்போமென்றெண்ணு தே
இந்தவுலகம்சதம் நமக் காகா தே
முந்தியநேகம்பேர் இப்படிதான்வர தே
முற்றும்பேசி மோசமானுர் புவிமீ தே (இ)

சூரபுத்மன்வாலிசஞ்சன் இரணிய ன்
சோமுகாசூரன் துரியோதிரன் தக்க ன்
பாரில்மதுகைட மாவலியானவ ன்
பாதகனும் கதைபார்த்து இருந்தத ன் (இ)

காந்திக்குமுன்பு ஸ்ரீராமகிருஷ்ணர்கீத ம்
காணுவாய்முன்னம் விவேகாநந்தர்போத ம்
சாந்தமுடனே அவர்கள்சொன்ன பாந்த ம்
சாதித்துணர்ந்தாரு தானறிவீர்சொந்த ம் (இ)

ஆருக்குஆரு சதந்தானெண்ணிபா ரு
ஆர்அரசாண்டால் நமக்கென்ன தாண்கூ ரு
பாருக்குள்ளே சின்னசாமி சொன்னவா ரு
பார்த்து நடந்தால் நற்கீர்த்திபுண்டுபே ரு (இ

---

# நொண்டிசிந்து.

நகரசுகானந்தரே இந்த
நாட்டினில் நடந்திடும்நல் விந்தையை பாரே
புகலுவேன் தாலுக்கா போர்டு
பொதுமுனிசிபால் சட்ட சபையென்றும். (க)

பஞ்சாயத்து கோர்ட்டு யூனியன்
பலமான கவுன்ஸிலர்ஓட்டு வாங்க
அஞ்சாமல் தன் பணத்தை அவரவர்க்கு
ஆனமட்டும் தான்கொடுத்து கையொப்பம் (ந)

எந்தனுக்கு போடுமையா உம்மை
எந்த நாளும் மரந்திடேன் சொந்தமே யென்று
தந்திர வார்த்தை சொல்லி பேப்பர்களில்
தயவு செய்துமே ஓட்டு கொடுமென்கிறார். (ந)

இன்னமொன்று தான்யாரும் ஓட்கொடுக்கும்
இடத்தில் அவர்கள் கூட்டம் கூடிவிட்டால்
என்னுன்ன சொல்வேனையா உபசாரம்
இன்பமுடன் தானழைத்து அவர்களுக்கு (ந)

காப்பி டீ உப்புமாபு தோசையோடு
கணமான பூந்தி லட்டு பாதமல்லவா
சாப்பாடு தானுமென்று மிக்க
சந்தோஷமாய் பேசியவர்கள் மனதை (ந)

கலைத்து கையொப்பம் வாங்கி சர்க்கார்
கவுன்சில் வேலை யதுவும் ஆனபின்பு
அழைத்தாலும் பேசிடார்கள் அந்த
ஆககிட்டு சட்டத்தின் ரூல்படி இதன்பார். (ந)

தெருத் தெரு எங்கும்வருவார் நாம்
தெரிந்தவ ரென்று ஒருவார்த்தை செ ான்னால்
பொருந்தாது போர்டு செக்ஷன்
போல நட்க்காவிட்டால் வேலைபோ மென்று (ரு)

சட்டம் மீறி பேசாதே உமது
சாக்கிடைதண்ணீர் அதிகம் வருகுதென்பார்
திட்டமாய் இபபடியிருக்க திருச்சை
சின்னசாமி சொன்னமொழி தன்னை அறிவீர் (௬)

---

# வெள்ளிமலை யொத்தபல மேடை

என்ற வர்ணமெட்டு.

இராகம் செஞ்சுருட்டி தாளம் ஆதி.

பல்லவி.

அரிய பெரியோர் உறியோரே உலகு
அற்புதத்தை கண்டுறைத்தேன் நேரே நீங்கள்
ஆத்திரபடாமலென்மேல்
நேர்த்தியாய் ஒவ்வொன்றும் யோசிப்பீரே
புலியோரே

கெர்வத்தாலிவனுறைத்தானென்று பெருங்
கீர்த்தியுள்ளவரெண்ணுதீர் இன்று இந்த
கீதத்தின் வசனமுதலானகவி தானரிவீர் ஒன்.
பெருவீர் நல்

கற்றவ ருற்றவர்பாதம் ஐயா இரு
கரங்குவித்து பணிந்தேன் மெய்யா கவி
காலத்தின் நிலமை இந்த
கோலமாய் இருப்பதுவும் பொய்யா
அரிவீரையா.

சிறுவன் பலதேசமும் சுற்றி ஆங்காங்கு
செய்யும் நடத்தைகளை பற்றி இதோ
சின்னசாமி சொன்னமொழி
மன்னவரும் கண்டரிவீர் போற்றி
பணிந்தேன் சாற்றி

மங்களம்!

மங்களம்!! மங்களம்!!!

முற்றிற்று.

திருச்சினுப்பள்ளி வீராசாமி பிள்ளை குமாரர்

டிராமா அயன் ராஜபார்ட்

# டி. வி. ஆர். சின்னசாமி பிள்ளை

அவர்கள் இயற்றிய

| | | | |
|---|---|---|---|
| திருவண்ணாமலை ஜோதிப்பிரகாச கீர்த்தனை... | 0 | 3 | 0 |
| மஹாவிஷ்ணு பக்திரசக்கீர்த்தனை ... ... | 0 | 4 | 0 |
| இந்தியா இராஜேந்திர திலகம் ... ... | 0 | 6 | 0 |

வ. கோதண்டபாணி செட்டியார்,

புக்ஷாப் ஜாகிர், ஆரணி.